[15th March 1960

மாறியதால்தான் பெட்ரோலியம் கிடைக்கிறது. பொதுவாக எத்தப் பகுதியில் கடல் இருந்து நிலமாக மாறியதோ அப்பகுதியில் பெட்ரோலியம் இருக்கலாம்.

SRI K. R. VISWANATHAN : ஸார், இந்தப் பரிசீலனையை ஒரு பரந்த எல்லையில் வருஷக்கணக்கில் செய்து கொண்டிருப்பதை விட்டு குறுகிய எல்லையில் தீவிரமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவை எடுப்பது நல்லதல்லவா என்பதை சர்க்கார் ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : எண்ணெய் எங்கெங்கு கிடைக்கலாம் என்று தோன்றுகிறதோ அந்த இடங்களிளெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். நாமாக குறுகிய இடத்தில் பரிசீலனை செய்தால் அங்கு எண்ணெய் இல்லாமல் போய் விடலாம்.

Publication of news regarding sexual crimes in newspapers

* 370 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to ban the publication in newspapers and periodicals of crimes involving sex and immorality?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are examining proposals to introduce a Bill to regulate the publication of reports of judicial proceedings in the press so as to prevnt the publication of obscene or indecent matter relating to crimes involving sex and immorality.

SRI V. SANKARAN : ஸார், ஏற்கெனவேயே, இந்த மாதிரி "எல்லோஜர்னலிஸம்"-ஐத் தடுக்க ஒரு மசோதா கொண்டு வரப் போவதாக இரண்டு அல்லது மூன்று செஷன்களாகச் சொல்லப் பட்டு வருகிறது. அந்த மசோதா எப்போது வரும் என்று திட்ட வட்டமாகச் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற மஞ்சள் பத்திரிகைகளின் போக்கைத் தவிர்க்க சட்டம் என்பது வேறு விஷயம். அது தனியாகப் பரிசீலனையில் இருக்கிறது. இது குறிப்பிட்ட ஒரு விஷயம். கோர்ட் நடவடிக்கைகளைப் பற்றிக் கேவலமாகப் பிரசுரிப்பது என்பது. இதைப் பற்றி இப்போது ஒரு மசோதா தயாரிக்கப் டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

SRI S. LAZAR : ஸார், இது போன்ற கேஸ்களை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதால், மக்களுக்குச் சட்ட அறிவு மிகக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால், அதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பலனும் குறைவு, சம்மந்தப்பட்டவர்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய தீமை அதிகம் பொது மக்களுக்கும் தவறான போக்கில் கருத்துக்களைக் கொண்டு செல்ல வாய்ப்பும் ஏற்படுகிறது. ஆகையால் இந்த மசோதாவைத் துரிதமாகச் சட்ட சபையின் முன்பு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

15th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிற மாதிரி சட்ட அறிவு குறைவு என்பது மாத்திரமல்ல. பரிபூர்ண சட்ட அறிவு இருந்தாலும் சில பத்திரிகைகளின் போக்கு வாசிப்பவர்களிடை மிகவும் கேவலமான, கீழ்த்தரமான உணர்ச்சியைக் கிளப்பும். நல்ல வார்த்தைகளான "இன்பம்", "பருவம்" இவைகளெல்லாம் மிகவும் கேவலமான கருத்துக்களை அளிக்கக்கூடிய வகையில் அன்றாடம் ஒரு பத்திரிகை கையாண்டு வருகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு ஒரு சட்டம் வேண்டுமென்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதைச் சீக்கிரத்தில் கொண்டுவரவேண்டும் என்பதுதான் எண்ணம்.

SRI K. ANBAZHAGAN : ஸார், பத்திரிகை ஆசிரியர்களுடைய ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்துவதன் மூலமாக, அந்தக் குழுவின் மூலமாக நல்ல கருத்துக்களை பத்திரிகை ஆசிரியர்களுக்குச் சொல்லி இந்தவகை தவறுதல்களைத் தவிர்க்கக் கூடாதா? இதற்குத் தனியாக ஒரு சட்டம் தேவைதானா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்திரிகை ஆலோசனைக்குழு என்பது புதிதல்ல. இப்போது இல்லாது இருந்து, சமீபத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்ன போதிலும், இது முன்பே இருந்தது. எனக்கும் இதில் பரிச்சயம் உண்டு. அதன் மூலம் இம்மாதிரி கேவலமான போக்குகளை—நடத்தைகளை—தடுக்க முடியாது.

SRI P. S. CHINNADURAI : சமீபத்திலே நாணுவதி வழக்கு—பிரசித்தமான ஒரு வழக்கு—எல்லாப் பத்திரிகைகளாலும் மிகவும் பிரகாசமாக விளம்பரப்படுத்தப்பட்டது. இந்த வழக்கின் முழு விவரங்களையும் வெளியிட்டன பெருவாரியான பத்திரிகைளெல்லாம். இப்படிப்பட்ட வழக்குகள் தாங்கள் கூறுகிற இந்த அடிப்படையில் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு அவகாசம் இருந்த நேரத்தில் நான்கூட இந்த நடவடிக்கைகளைப் படித்திருக்கிறேன். நான் குறிப்பிட்டது பத்திரிகைப் போக்கில் "ஆப்ஸீனிட்டி" என்றும், "இண்டீஸென்ஸி" என்றும் சொல்லக் கூடியவைகளைத் தவிர்ப்பதற்கு, அதற்குத் தகுந்தவாறு இந்த மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : இம்மாதிரிப் பத்திரிகைகளைக் கண்டிக்க ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டம் போதாதா? இதற்குப் புதிதாக ஒரு சட்டம் தேவையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டம் போதாததால்தான் இந்த ஆபாசம் அன்றாடம் வந்துக்கொண்டிருக்கிறது.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, கூடா ஒழுக்கங்களைப் பற்றிய வழக்குகளை நீதி மன்றங்களில் விசாரிக்கும் போது, மன்றங்களின் நடவடிக்கைகளைப் பற்றி பத்திரிகைகளில்

[15th March 1960

பரப்பரப்பான தலையங்கங்களுடன் பிரசுரிப்பதால், சமுதாயம் சீரழிந்து போகும் என்பதால், இம்மாதிரி பிரசுரிப்பதைத் தடுத்து சமுதாயத்தைச் சீரமைக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் அவருடைய எண்ணத்தைத் தெரிவிக்கிறார். நான் முன்பே விடையளித்தேன். கூடிய சீக்கிரம் கொண்டுவரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

Immoral Traffic Act

* 371 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to appoint more police officers to enforce the provisions of the Immoral Traffic Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is already a Special Police Officer of the rank of Assistant Commissioner of Police with a staff consisting of one Inspector, two Sub-Inspectors, four Head constables and twelve Police constables to enforce the provisions of the Suppression of Immoral Traffic Act, 1956 in Madras City. The Government, do not, at present, have under consideration any proposal for appointing more Special Officers to enforce the provisions of the Act in the mufussal.

SRI N. K. PALANISAMI : இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கான அதிகாரம் ஜில்லாக்களில் உள்ள போலீஸ் அதிகாரிகளில் எந்த ராங்கில் உள்ள அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளி ஊர்களில் இன்ஸ்பெக்டர்களும் அவர்களுக்குக் கீழே உள்ள அதிகாரிகளும் இதை அமல் நடத்துகிறார்கள்.

SRI A. A. RASHEED : Is it a fact that lovers sitting in parks during nights have been arrested under this Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If they are mere lovers, they would not be touched, Sir. (Laughter)

SRI S. LAZAR : இப்போது மத்திய சர்க்கார் இது சம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் வந்த பிறகு, அச்சட்டத்தின்படி நியமிக்கவேண்டிய குறிப்பிட்ட ஒரு அதிகாரியை நியமிக்காததால் இன்று வரையிலும் எந்த விதமான வழக்கையும் பதிவு செய்யமுடியாத நிலைமை இருக்கிறது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த அதிகாரியை சீக்கிரமே நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்கம் பார்லிமெண்டில் நிறைவேற்றியிருக்கும் அந்தச் சட்டம் இங்கே அமலுக்கு வந்திருக்கிறது. அச்சட்டத்தின் கீழ் என்னென்ன